

# இன்று உலக மக்கள் தொகை தினம்

## 11.07.2019

இன்று உலகில் பலர் மகிழ்ச்சிகரமாக பொழுதை கழிக்கும் வேளையில் குறிப்பிட்ட சிலர் ஊண் உறக்கம் இன்றி நோயினால் பீடிக்கப்பட்டு துயரில் தமது வாழ்வை கொண்டு செல்கிறார்கள். 2009 ஜுன் இடம்பெற்ற ஜி. 8 நாடுகளின் மாநாட்டின் ஒரு பகுதியான "உலக வறுமையும், பற்றாக்குறையும்" என்ற அமர்வில் கலந்துகொண்டு பேசிய உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் ஜொசெர்சின் கூறியதாவது, "உலகில் உள்ள ஆறு பேரில் ஒருவர் பசிக் கொடுமைக்கு உள்ளாகிறார். உலகில் 6 விநாடிக்கு ஒரு குழந்தை போதிய சத்துணவின்மையினால் இறக்கிறது. ஆபிரிக்கா கண்ட நாடுகள்தான் இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இது போன்ற நிலை கடந்த 20 ஆண்டுகளில் எப்போதும் இருந்ததில்லை. இதே நிலை நீடித்தால் பட்டினிச்சாவு ஆபத்து ஏற்படும். மனிதாபிமான அவலத்தின் விளிம்பில் உலகம் உள்ளது. இதனை எதிர் கொள்ள முழுமையாக நன்கொடைகளையே நம்பியுள்ளோம்" என்றார்.

1986ஆம் ஆண்டு ஜுலை 11ஆம் திகதி உலக மக்கள் தொகை 500 கோடியாக காணப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் அபாயத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபை 1987ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜுலை 11ஆம் திகதியை உலக மக்கள்தொகை தினமாக அறிவித்ததுடன் மக்கள் தொகை பெருக்கத்தின் தீமைகளையும், சிறுகுடும்ப நெறியின் நன்மைகளையும் எடுத்துரைப்பதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 200 கோடிக்கும் குறைவாக இருந்த மக்கள்தொகை 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி 700 கோடியைத் தொட்டுவிட்டது. இவ்வாறு உலகளாவிய ரீதியில் அதிகரித்துச் செல்லும் மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு எடுத்துச்செல்லும் ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் ஐ.நா. சனத்தொகை நிதியத்தினால் (UNFPA) இவ்வாண்டின் தொனிப்பொருளாக "நிறைவு செய்யப்படாத வணிக அலுவல்கள் மீது கவனம் செலுத்துதல்" என்பதனை பிரகடனப்படுத்தியுள்ளது.




இன்று உலகில் ஒவ்வொரு நாட்டிலும் சனத்தொகை கணக்கெடுப்பு என்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், ஒரு நாட்டில் வாழும் சனத்தொகையின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே அந்நாட்டின் அபிவிருத்தி, உற்பத்தி போன்ற துறைகளில் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகரிக்கும் மக்கள் தொகையால் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன.

இந்த சனத்தொகை அதிகரிப்பானது பூமியில் இருக்கும் பயன்பாட்டுக்குரிய வளத்தை விட அதிகமாக உருவாகி வருவதால் குடிநீர் மற்றும் உணவு வளப்பிரச்சினை என்பது உலகில் விரைந்து அதிகரிக்கும் நிலை இருந்து வருகிறது. இவற்றோடு இன்று சுற்றுச் சூழல் மாசடைவும் இணைந்துள்ளது. வறுமை, வேலையின்மை, அடிப்படைச் சுகாதார வசதியில்லை, சுற்றுச்சூழல் கேடு, தண்ணீர்ப் பஞ்சம் போன்றவற்றிலிருந்து வன்முறை, கொலை, கொள்ளை வரையிலாக அனைத்தும் அளவுக்கதிகமான மக்கள் தொகைப்பெருக்கத்தின் பக்க விளைவுகளே!

இச்சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த மக்கள்தொகை கட்டுப்பாடு எனும் முறை பேணப்படுகின்றது. இது மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதாகும். பொதுவாக பிறப்பு வீதத்தைக் குறைப்பதன் மூலம் நிகழ்த்தப்படுகிறது. இச்செயற்பாடு இன்று நேற்று தொடங்கியவொன்றல்ல. காரணம் பண்டைய கிரேக்கத்தில் இருந்து கிடைத்த ஆவணங்களில் முதன்முதல் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இச்சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்காக பல நாடுகளில் வெவ்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையை பொறுத்தமட்டில் இது பல்லின மக்கள் ஒன்றாக வாழும் நாடாகும். 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, இலங்கையின் மக்கள் தொகை 20,950,041 ஆவதுடன் பிறப்பு விகிதம் 14.8 ஆகவும் இறப்பு விகிதம் 6.3 ஆகவும் காணப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் உலக சனத்தொகை பெருக்கமானது மிகப்பெரும் பிரச்சினையாக உருமாறக் கூடும் என்பதால் அது சம்பந்தமாக ஒவ்வொருவரும் தற்போதிலிருந்தே சிந்தித்து செயலாற்ற வேண்டும். இது நம் எதிர்கால சந்ததிக்காக நாம் நிறைவேற்ற வேண்டிய மிக முக்கிய கடமையாகும்.